மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 96, திரு. எஸ். ஆசைமணி, மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

96—

குத்தாலம் ஒன்றியத்தில் குழந்தைகள் நலமையம் அமைத்தல்

***23883**—திரு. எஸ். ஆசைமணி:*

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், திருமணஞ்சேரி ஊராட்சி, அஞ்சாறு வார்த்தலை கிராமத்தில் குழந்தைகள் நலமையம் அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆம் என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற அனாதைக் குழந்தைகள், தொட்டில் குழந்தைகள் மற்றும் ஊனமுற்ற குழந்தைகளுக்கு தாயாகவும், தந்தையாகவும், தெய்வமாகவும் காட்சியளித்துக் கொண்டிருக்கிற நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் இந்த குழந்தைகள் நல மையத்தை இந்த ஆண்டே ஆரம்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே ஆரம்பிக்கப்படும். நாகப்பட்டினம், குத்தாலம் ஒன்றியம், திருமணஞ்சேரி ஊராட்சி, அஞ்சாறு வார்த்தலை கிராமத்தில் 2 முதல் 4 வயது வரையுள்ள சத்துணவு சாப்பிடும் குழந்தைகள் 30 பேர் இருக்கிறார்கள். நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் தற்போது தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டம் உலக வங்கியின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருவதால் இதற்காக பணியாளர்கள் இப்போது பயிற்சியில் இருக்கிறார்கள். பயிற்சி முடிந்து வந்தவுடன் அந்தத் திட்டம் முழு அளவில் அஞ்சாறு வார்த்தலை கிராமத்தில் அமல்படுத்தப்பட்டு ஊட்டச் சத்து மையம் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 97, திருமதி. இரா. பாண்டியம்மாள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.